**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

**OS. No.429/2023**

**14.10.2025**

**P.W.2- பழனி**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

பாண்டித்துரை, பாரத் மீது புகார் கொடுத்துள்ளார். அதற்கு நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இடம் வாங்கியதில் ஏற்பட்ட பிரச்சினை குறித்து சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். பாண்டித்துரை எனது நண்பர், பாரத் எனது ஊர்க்காரர் ஆவார். 16.03.2022ம் தேதியில் கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டது எனக்கு நேரடியாக தெரியும். நான் 6ம் வகுப்பு படித்துள்ளேன். நான் லோடுமேன் வேலை பார்த்து வருகிறேன். நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பாண்டித்துரை சொல்லி நான் சாட்சி கையெழுத்து போட்டேன். என்னுடன் சின்னச்சாமி என்பவரும் கையெழுத்து செய்தார். நான் இதுபோன்று வேறு கையெழுத்து செய்யும் பழக்கம் உண்டா என்றால் காவல்துறை வழக்குகளில் கையெழுத்து போடுவேன். நான் பணத்திற்காக கையெழுத்து போடும் பழக்கமுடையவன் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை பொறுத்து ஒரு கையெழுத்து மட்டும் போட்டுள்ளேன். 08.03.2021ம் தேதிய பதிவு செய்யப்பட்ட ஆவணத்தில் எனது கையெழுத்து உள்ளது என்றால் என்னுடைய கையெழுத்து தான். மேற்படி கையெழுத்து எதற்காக போட்டேன் என ஞாபகமில்லை. மேற்படி ஆவணம் குறித்து எனக்கு ஞாபகமில்லை. எதற்காக பாண்டித்துரை கையெழுத்து செய்தார் என்றால் கிரைய ஒப்பந்தத்திற்காக கையெழுத்து செய்தார். தாவா சொத்து குறித்து வாதியின் தகப்பனார், பிரதிவாதியின் கடைக்கு வந்த தினமும் வட்டித்தொகையை வாங்கியது எதற்கு என்று தெரியுமா என்றால் வட்டி வாங்கியது தெரியாது, பணம் வாங்குவது தெரியும். நான் இதுபோன்று மற்ற வழக்குகளில் சாட்சியம் அளிக்கும் பழக்கம் கொண்டுள்ளேன் என்றால் சரிதான். வழக்கை யார், எதற்கு தாக்கல் செய்தார்கள் என்ற விவரம் தெரியாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பணம் வாங்கிவிட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் மீது குற்ற வழக்கு உள்ளதா

என்றால் சீட்டு விளையாடிய வழக்கு உள்ளது. தாவா சொத்தின் தற்போதைய மதிப்பு எவ்வளது என்றால் தற்போதைய மதிப்பு தெரியாது, ஒப்பந்தம் ஏற்படும்போது ரூ.7 லட்சம் இருக்கும். தாவா சொத்து உள்ள பகுதியில் தற்போது 1 சென்டு ரூ.10 லட்சம் என்றால் தெரியாது. தாவா சொத்தை அபகரிக்க முயற்சி செய்து தாக்கல் செய்த வழக்கிற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பாண்டித்துரை கடன் வாங்கினார் என்றால் பத்திர அலுவலகத்தில் வைத்து ஒப்பந்தம் செய்து தான் பணம் வாங்கினார்.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.10.14 17:20:06 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.